[1983 பிப்ரவரி 12

தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தை நகராட்சிகளுக்கு விரிவுபடுத்தும் திட்டம்.

*குறுகிய கால வினா எண். 6—திரு. வெ. அரங்கராசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகராட்சிகளுக்கு தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் அரசின் சார்புத் திட்டம் ஆகும். (Centrally sponsored Scheme) இத்திட்டத்திற்காக மத்திய அரசு வகுத்துள்ள விதிமுறைகளின்படி, ஊரகப் பகுதிகளில்தான் நலிவுற்ற மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் நிறைவேற்றப் பட வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது. தற்பொழுது தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தினை நகராட்சிகளுக்கு விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. வெ. அரங்கராசன் : தலைவர் அவர்களே, நகராட்சிகளுக்கு விஸ்தரிக்கின்ற திட்டம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நகராட்சி சாலைகளோடு கிராமப்புறங்களுக்குச் செல்கின்ற சாலைகள் இணைந்திருக்கின்ற காரணத்தால் அந்தச் சாலைகளைச் செப்பனிட வேண்டும். ஆனால், போதிய நிதி வசதி நகராட்சிகளில் இல்லாத காரணத்தால், அவர்களால் செப்பனிட முடியாத நிலைமை இருக்கின்ற காரணத்தால் கிராமப்புறங்களுக்குச் செல்கின்ற சாலைகளை இந்தத் திட்டத்தின் மூலம் செய்ய அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-30)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திட்டத்தின் பெயரே தேசீய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம். ஆகவே, பெயரில் கிராமப்புற வேலைவாய்ப்பு என்று வைத்துக்கொண்டு அதை நகர்ப்புறத்திற்கு விரிவாக்கம் செய்ய வேண்டும் என்பது முடியாத காரியம். மத்திய அரசாங்கம் தேசீய நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் என்று ஏதாவது கொண்டுவந்தால் அப்போது இதைப் பற்றிப் பார்க்கலாம்.

திரு. வெ. அரங்கராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புறத்திற்கு விஸ்தரிப்பு இல்லை என்றார்கள். நகர்ப்புற நகராட்சியில் நிதி வசதி இல்லாத காரணத்தால் நகர்ப்புறத்தில் இருக்கக்கூடிய சாலைகளைச் செப்பனிட முடியாமல்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இருக்கிறது. கிராமங்களில் செல்லுகின்ற சாலைகளுக்கு அந்த திட்டத்தின் மூலமாக நகராட்சியின் எல்லையாக இருந்தால் அதை செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்புறங்களைப் பொறுத்தவரையில் எந்த எந்த நகராட்சிகள் பொருளாதாரத்தில் பலவீனமாக இருக் கின்றனவோ அவைகளுக்கு இந்த மாநில அரசு மூலமாக தன் நிறைவு திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். அந்தத் திட்டத்தின் அடிப்படையில் அங்கே சாலைகளைப் பழுதுபார்க்க லாம்.

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நகர்ப்புறங்களுக்கு இந்த திட்டத்தில் இடம் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் பேரூராட்சிகளில் இந்த தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் நடைபெறவில்லை என்று கேள்விப்படுகிறோம். எனவே, அரசு இந்த தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தை பேரூராட்சிகளுக்கும் விஸ்தரிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே பேரூராட்சிகளுக்கும் விஸ்தரிக் கப்பட்டிருக்கிறது.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லுகின்றபோது இந்தத் திட்டத்தை நகராட்சிகளுக்கு விஸ்தரிக்க முடியாது என்று சொன் னார்கள். இந்த திட்டமே ஜனதா அரசாங்கத்தில் Food for Work Scheme என்று கொண்டு வந்தார்கள். பின்பு இந்திரா காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தது. National Rural Development Scheme என்று பெயரை மாற்றிவிட்டார்கள். பெயரை மட்டும்தான் மாற்றினார்கள். ஆகவே ஏன் நகராட்சிகளுக்கு இதை விஸ் தரிக்கக்கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Food for Work Scheme தான் இந்த வேலைக்கு உணவு திட்டம். ஜனதா ஆட்சிக் காலத்தில் கொண்டுவந்தார்கள். அப்போது அவர்கள் கொண்டுவந்த காலத்திலே 100-க்கு 100 மானியமாகக் கொடுத்தார்கள். அதற்கு பின்னால் வந்த இந்திரா காங்கிரஸ் அரசு இதை 100-க்கு 50 என்று செய்துவிட்டார்கள். அது மட்டும் அல்லாமல் வேலைக்கு உணவு திட்டம் கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பு அற்றவர்களுக்கு வேலை கிடைக்க வேண்டும் என்ற திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஆகவே, அதுவே தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் என்று பெயர் மாற்றப்பட்டு இருக் கிறது.